# <u>JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU</u>

## <u>CC No.318/2016</u>

## <u>DEPOSITION OF WITNESS</u>
## <u>(Chapter XXIII Code of Criminal Procedure)</u>

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : Lw10/Pw4 |
| Name | : Balaji |
| Father/Husband's Name | : Veeraragavan |
| Village | : |
| Taluk | : |
| Calling | : |
| Age | : 52 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 26.11.2025.

**Accused absent.**

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது தென்காசி மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் கண்காணிப்பாளராக பணியாற்றி வருகிறேன். நான் செங்கல்பட்டு கடந்த 01.07.2011 முதல் 21.06.2013 வரை செங்கல்பட்டு II சார்பதிவாளர் அலுவலகத்தில் சார் பதிவாளராக பணிபுரிந்தேன். அப்போது மாவட்ட குற்ற பிரிவு குற்ற எண்.157/2011 உதவி ஆய்வாளர் இவ்வழக்கின் ஆவண நகல்கள் மற்றும் வில்லங்க சான்றிதழ்களை கேட்டார். நான் அவற்றை நீதிமன்றத்தில் சமர்ப்பித்தேன். அவைகள் பின்வாறுமாறு

காட்டன்குளத்தூர் கிராம சர்வே எண்.3 ல் அடங்கிய 58 செண்ட் நிலத்தை கதிர்வேல் உடையார் த.பெ. நாகலிங்கம் உடையார், காட்டான்குளத்தூர் என்பவரிடம் கனகமல் சவுக்கார் த.பெ. கேவர் சந்து சவுக்கார், கூடுவாஞ்சேரி கிராமம் என்பவரிடம் கிரையம் பெற்றுள்ளார். அந்த ஆவண எண்.2333/1951 நாள்.10.09.1951. அது **அதசா.ஆ3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

ஆவண எண். 4225/1965 நாள்.25.12.1965 காட்டான்குளத்தூர் கிராம சர்வே எண்.3, ஏக்கர் 2.91 செண்ட் நிலத்தை கனகமல் சவுக்கார், த.பெ. கேவர் சந்து சவுக்கார்,

கூடுவாஞ்சேரி என்பவரிடம் சந்திராம்மாள் க.பெ.சம்பந்த முதலியார், மேற்கு மாம்பலம் என்பவர் கிரையம் பெற்றார். அது **அதசா.ஆ4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

ஆவண எண். 2582/1970 நாள்.17.10.1970 காட்டான்குளத்தூர் கிராம சர்வே எண்.3 ல் அடங்கிய, ஸ்ரீபாலாஜி நகர், மேற்கு பகுதி, பி மனை பிரிவில் அடங்கிய, மனை எண்கள். 16, 17,18,19,20,21,22,23,24,25,26,28,29,30,31,32,33,34,35,42,43,44,45,46,47,48 மொத்தம் 25 மனைகள் மொத்த விஸ்திரணம் 36 கிரோண்டு 750 சதுரடி சந்திரம்மாள் க.பெ.சமபந்த முதலியார், மேற்கு மாம்பலம், சென்னை என்பவர் ராமகிருஷ்ணன் த.பெ.நீலகண்ட ஐய்யர் நரசு என்டர் கம்பெனி, மேற்கு மாம்பலம் என்பவர் கிரையம் பெற்றுள்ளார். அந்த ஆவணம் **அதசா.ஆ5 ஆக** குறியீடு செய்யப்படுகிறது.

ஆவண எண். 3080/1971 நாள்.10.12.1971 காட்டான்குளத்தூர் கிராம சர்வே எண்.3 ல் அடங்கிய ஸ்ரீபாலாஜி நகர், மேற்கு பகுதி, பி மனை பிரிவில் அடங்கிய, மனை எண். 33, விஸ்திரணம் 5285 சதுரடி ராமகிருஷ்ணன் த.பெ. நீலகண்ட ஐய்யர் மேற்கு மாம்பலம், சென்னை என்பவரிடம் சோமசுந்தர ஐய்யர் த.பெ.சத்தியவாகீஸ்வர ஐய்யர், சென்னை என்பவர் கிரையம் பெற்றுள்ளார். அந்த ஆவணம் **அதசா.ஆ6 ஆக** குறியீடு செய்யப்படுகிறது.

ஆவண எண். 1280/2010 நாள்.03.03.2010 காட்டான்குளத்தூர் கிராம சர்வே எண்.3 ல் அடங்கிய ஸ்ரீபாலாஜி நகர், மேற்கு பகுதி, பி மனை பிரிவில் அடங்கிய, மனை எண். 33, விஸ்திரணம் 5285 சதுரடி 1) ராஜேலட்சுமி ஐய்யர், க.பெ. சோமசுந்தர ஐய்யர், 2) கோமதி க.பெ. ஜெயராம், 3)லலிதா க.பெ. பால், என்பவர்களிடம் ஜெ.சாந்தி, க.பெ. ஜானகிராமன், இரும்புளியூர், தாம்பரம் என்பவர் கிரையம் பெற்றுள்ளார்.

ஆவண எண். 2944/2001 நாள்.02.12.2001 காட்டான்குளத்தூர் கிராம சர்வே எண்.3 ல் 1 ஏக்கர் 46 செண்ட் நிலத்தை 1) பெருமாள் த.பெ.பரமசிவம், 2) மனோகரன் த.பெ.தேசிங்கு, 3) சுப்பன் த.பெ.சுப்பிரமணி, பொத்தேரி என்பவர்கள் ஏ.சங்கர் த.பெ. ஆறுமுகம், நின்னக்கரை கிராமம் என்பவரிடம் அடமானம் போடப்பட்டுள்ளது. அந்த ஆவணம் **அதசா.ஆ7 ஆக** குறியீடு செய்யப்படுகிறது.

ஆவண எண். 129/2002 நாள்.29.05.2002 காட்டான்குளத்தூர் கிராம சர்வே எண்.3 ல் அடங்கிய 2 ஏக்கர் 91 செண்ட் நிலத்தை பெரியகுள்ளன், சின்னகுள்ளன் பொத்தேரி என்பவரின் வாரிசுகள் 1) அற்புதராஜ், த.பெ. தனம், பொத்தேரி கிராமம், என்பவர் ஏ.சங்கர் த.பெ. ஆறுமுகம் நின்னக்கரை கிராமம் என்பவருக்கு கிரையம் கொடுத்துள்ளார். அந்த கிரைய ஆவணம் **அதசா.ஆ8 ஆக** குறியீடு செய்யப்படுகிறது.

ஆவண எண். 10114/2006 நாள்.07.08.2006 காட்டான்குளத்தூர் கிராம சர்வே எண்.3/1, 3/1A, 1A ல் அடங்கிய ஏக்கர் 1.74 செண்ட் நிலத்தை 1)பெருமாள் த.பெ.சுப்பன், 2) பரமசிவன் த.பெ.சுப்பன், காட்டான்குளத்தூர் என்பவர்களுக்கு 1)குப்பம்மாள், 2)சந்திரா, 3) யசோதா, 4) விமலா, 5)முருகம்மாள், என்பவர்கள் அக்குவிடுதலை பத்திரம் எழுதி கொடுத்துள்ளார்கள். அந்த பத்திரம் **அதசா.ஆ9 ஆக** குறியீடு செய்யப்படுகிறது.

ஆவண எண். 7304/2007 நாள்.23.05.2007 காட்டான்குளத்தூர் கிராம சர்வே எண்.3/1, புதிய சர்வே எண்.3/1A3A ல் அமைய பெற்ற ஸ்ரீபாலாஜி நகர், மேற்கு பகுதி, பி மனை பிரிவில் அடங்கிய, மனை எண். 33, விஸ்திரணம் 5285 சதுரடி மனையை 1) கோதண்ட ராமன், த.பெ. குருபுத்திர தேவர், ராஜபாளையம், என்பவருக்கு 1.பெருமாள், த.பெ.சுப்பன், 2) பரமசிவன், த.பெ.சுப்பன், நேரு தெரு, மறைமலை நகர், ஆகியோர் கிரையம் கொடுத்துள்ளனர். அந்த கிரைய பத்திரம் **அதசா.ஆ10 ஆக** குறியீடு செய்யப்படுகிறது.

ஆவண எண். 1893/2007 நாள்.14.02.2007 காட்டான்குளத்தூர் கிராம சர்வே எண்.3 ல் அடங்கிய ஏக்கர் 2.91 செண்ட்டில் ஏக்கர் 1.17 செண்ட் காலி மனையில் மனை எண்கள். 24,25,33,35,36 விஸ்திரணம் 15295 சதுரடியை 1) செல்வகுமார், 2)ஷேக்பீட்டர், ஆகியோர்கள் விக்கிரைய உடன்படிக்கை ஆவணம் பதிவு செய்யப்பட்டுள்ளது. அந்த ஆவணம் **அதசா.ஆ11 ஆக** குறியீடு செய்யப்படுகிறது.

ஆவண எண். 5292/2007 நாள்.12.04.2007 ஷேக்பீட்டர், செல்வகுமார் ஆகியோர் இருவரும் முன் ஆவணமான 1893/2007, உடன்படிக்கை ஆவணத்தை ரத்து செய்கின்றனர். அந்த ரத்து பத்திரம் **அதசா.ஆ12 ஆக** குறியீடு செய்யப்படுகிறது.

ஆவண எண். 10687/2007 நாள்.10.08.2007 காட்டான்குளத்தூர் கிராம சர்வே எண்.3ல் அமைய பெற்ற ஸ்ரீபாலாஜி நகர், வீட்டு மனை பிரிவில், மனை எண். 33, விஸ்திரணம் 5285 சதுரடி மனையை 1) ராமகிருஷ்ணன் த.பெ.நீலகண்ட ஐய்யர், செவ்வாய்பேட்டை, திருவள்ளூர் என்பவர் சிவானந்தம், த.பெ.ரேணுகவுண்டர், 2) ராமராஜ், த.பெ. இருளாண்டி, குரோம்பேட்டை என்பவருக்கு கிரையம் செய்யப்பட்டுள்ளது. அந்த ஆவணம் **அதசா.ஆ13 ஆக** குறியீடு செய்யப்படுகிறது.

ஆவண எண். 97/2012 நாள்.04.01.2012 காட்டான்குளத்தூர் கிராம சர்வே எண்.3ல் அமைய பெற்ற ஸ்ரீபாலாஜி நகர், வீட்டு மனை பிரிவில் அடங்கிய, மனை எண். 33, விஸ்திரணம் 5285 சதுரடி கொண்ட மனையை முன் கிரைய ஆவணம் 10687/2007

ஆவணத்தினை ரத்து செய்துள்ளனர். அந்த ரத்து பத்திரம் **அதசா.ஆ14 ஆக** குறியீடு செய்யப்படுகிறது.

மேற்கண்ட ஆவணத்திற்கான வில்லங்க சான்றிதழ் 01.01.1945 முதல் 01.01.1986 வரை 01.01.1987 முதல் 30.01.2012 வரை, வில்லங்க சான்றிதழ் நகல் மேற்படி பாலாஜி நகர் மனை பிரிவிற்கு அரசு வழிகாட்டி சதுரடி 900 என உள்ளது என சான்றிட்டு நகல் வழங்கினேன். அந்த வில்லங்க சான்றிதழ் **அதசா.ஆ15 ஆக** குறியீடு செய்யப்படுகிறது.

போலீசார் என்னை விசாரணை செய்தனர்.

குறுக்கு விசாரணை இல்லை.

மறு விசாரணை இல்லை.

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

sd/-S.Sahaana

Judicial Magistrate No.II,
Chengalpattu.